**கவிஞர் வேலுசுவாமியின் அருள்புரிவாய் கவிதைக் தொகுப்பு: ஓர் ஆய்வு**

**முனைவர் கிருஷ்ணன் மணியம், மலாயாப் பல்கலைக்கழகம்**
**சிவகுமார் சுப்பிரமணியம், உமாதேவி வீராசாமி, முத்துகுமார் பழனிச்சாமிதெங்கு அம்புவான் அப்சான், ஆசிரியர் கல்விக் கழகம், கோலா லிப்பிஸ் பகாங்**

**முன்னுரை**

உலக மக்களின் வாழ்க்கைப் பின்னணியை மையமாக வைத்தே இலக்கியம் படைக்கப்படுகின்றது. இலக்கியம் மக்களுக்காவும் அவர்களுடைய வாழ்க்கையை நெறிபடுத்தும் அற்புதக் கருவியாகவும் திகழ்கிறது என்றாலது மிகையில்லை. 'ஈரடி இருநூறு' எனும் நீதி நூல் இலக்கியத்தைக் கீழ்வருமாறு விவரிக்கின்றது.

"இலக்கியம் என்ப இயலழகு நீதி
இலக்காக இன்பந் தரின்" (ஈரடி.இரு. 5:1)

இந்நூலுக்கு உரை விளக்கம் எழுதிய இலவழகனார் மேற்காணும் செய்யுளடியினை இவ்வாறு விளக்குகின்றார். நூல்களாற் கூறப்படும் உறுதிப் பொருளாகிய அறம், பொருள், இன்பம் என்பனவற்றை இலக்காகக் கொண்டு எதையும் மெய்ப்பாடு என்னும் சுவையின்பம் பயக்கக் கூறுவது இலக்கியம்.

இலக்கியம் மானிட வாழ்க்கையின் அடி நாதமாகத் திகழ்கின்றது. அதனைப் படிப்பவரின் சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் தெவிட்டாத அமுதாக அமைகின்றது. மொழியை ஊடகமாகக் கொண்டு, சொற்றொடராக இயைந்து புதுவடிவம் பெறுகின்றது. மேலும், இலக்கியத்தைக் கற்றபவர் எண்ணதில் எழுச்சி; சிந்தனையில் வளர்ச்சி; அறிவினிலே முதிர்ச்சி; மனதில் அழகுணர்ச்சி. இவ்வகை இலக்கியத்தில் இணைவதுதான் சிறுவர் இலக்கியம்.

**சிறுவர் இலக்கியம்**

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பர். அவ்கையிலெ சிறுவர் இலக்கியம் இன்றைய சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்காற்றுகின்றது என்பது வெள்ளிடைமலை. சிற்பி எவ்வாறு தான் உருவாக்க நினைக்கும் சிற்பத்தை மிகவும் கண்ணும் கருத்துமாகச் செதுக்கி உருவாக்குகின்றானோ, அவ்வாறே சிறுவர் இலக்கியம் சிறுவர்களின் ஒழுக்கம், நன்னெறிப் பண்பு, சமூகவியல் வாழ்க்கை போன்ற வாழ்வியல் கூறுகளைத் திறம்படப் பதித்து, சிறுவர்களின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துகின்றது.

குழந்தைகளின் பரிமான வளர்ச்சி என்பது முழுமைப் பெற்றதாக இருக்க வேண்டும். சிறுவர்களின் உள்ளமும் மனமும், மணியும் ஒலியும் போல இரண்டறக் கலந்து சேர்ந்தே வளர்ச்சிக் காண வேண்டும். சிறுவர் இலக்கியம் அதற்குக் சரியான மருந்தாகத் திகழ்கின்றது. சிறுவர் இலக்கியமாகக் கருதப்படும் பாட்டு, கதை, கட்டுரை, கவிதை மற்றும் நாடகம் போன்றவை சிறுவர்களின் மனதைப் பண்படுத்த சிறந்த சாதனம். அவர்களின் மனதைச் செம்மைப்படுத்தும் அருமருந்து. இதனை நன்கு உணர்ந்த விர்ஜினியா மாதேசன் ஹுக்கெர் (Virjinia Mathesan Hooker) இலக்கியத்தின் முக்கியத்துவத்தை இவ்வாறு விளக்குகின்றார்:-

'ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குவது நான்கு வழுவான தூண்களாகும். ஒவ்வொன்றும் அதன் கடமையறிந்து தன் பங்கினைச் செவ்வென நிறைவேற்றுகின்றன. அவை, நாட்டின் குடி மக்கள், மதம், மொழி மற்றும் இலக்கியமாகும். இந்த நான்கு தூண்களின் இயக்கமே நாட்டின் உயர்வும் செழுமையும் உள்ளடக்கியுள்ளது'.

*(விர்ஜினியா மாதேசன் ஹுக்கெர், 2000: பக் 261)*

***சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகள்***

*இத்தகைய அற்புதமான சிறுவர் இலக்கியத்தைத் தமிழில் தொடக்கி வைத்த முன்னோடிகளில் சிறப்பித்துக் கூறுபவர்கள் பலர் உள்ளனர். அவர்களில் முக்கியமாகக் கருதப்படுபவர்கள் அவ்வையார், அதிவீரராம பாண்டியர், உலக நாதர் மற்றும் குமர குருபரர். அவ்வையார் இயற்றிய ஆத்திசூடி, மூதுரை, கொன்றை வேந்தன் மற்றும் நல்வழி ஆகிய நான்கு நூல்களும் சிறுவர் இலக்கியத் தோற்றத்தின் ஆணி வேராகத் திகழ்துள்ளன. மேலும், அதிவீராமப் பாண்டியர் இயற்றிய வெற்றி வேற்கை, உலக நாதர் இயற்றிய உலக நீதி மற்றும் குமரக்குருபரர் இயற்றிய நீதி நெறி விளக்கம் போன்ற அறநூல்களே ஆரம்பக் காலத்தில் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்திருக்கின்றன.*

*மேலும், இவர்களுடைய நூல்களில் பொதிந்துள்ள அறம் சார்ந்த கருதுகள் சிறுவர்களின் மனதைச் செம்மைப்படுத்துவது மட்டுமின்றி நன்னெறி, உயர்ந்த சிந்தனை, ஒழுக்கமான வாழ்க்கை, சமூகவியல் கோட்பாடு போன்ற அற்புதமான வியூகங்களையும் வகுத்துள்ளன என்றாலது மிகையாகாது. உலக மாந்தர் சிறப்புடன் வாழவும் மாண்புடன் வாழவும் அழகிய கருதுகளை அற்புதமாய்ப் பதித்திடும்*

*மேற்காணும் முன்னோடிகளை அடியொற்றியே குழந்தைக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை, மகாகவி பாரதியார் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் போன்றோர் தோன்றினர். தமிழ் இலக்கியத்தின் வித்தாகத் திகழ்ந்த இவர்கள் தமிழ் மொழி, இனம், மதம் மற்றும் இலக்கியம் போன்ற துறைகளுக்கு வற்றாத ஆதரவு வழங்கியுள்ளனர். சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் இவர்களுடைய தொண்டு போற்றத்தக்க ஒன்றாகும். குறிப்பாக 18-ஆம் மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் இவர்கள் மூவரும் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குச் சீரியத் தொண்டாற்றியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மேலும், இவர்களின் தொண்டு போற்றுதற்குரியது. இவர்களுடைய கவிதைப்படைப்புகள் அனைத்தும் சிறுவர்களின் மனதில் நல்லொழுக்கம், நல்லெண்ணம் மற்றும் நன்னெறி போன்ற வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது. சிறுவர் உள்ளங்களைச் செம்மைப்படுத்திச் சீர்படுத்தும் அற்புதச் சாதனமாகத் திகழ்கின்றன என்றாலது மிகையாகாது. சிற்பி போன்று சிறுவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் அழகாகச் செதுக்கி உருவாக்கி, சிறந்த மானிடனாக வலம்வரச் செய்கின்றது சிறுவர் இலக்கியம்.*

*ஹர்லோக் (1978) ஒரு மனிதனின் சமூகவியல் வளர்ச்சி என்பது அவனுடைய நடவடிக்கையும் நன்னெறிப்பண்புகளும் எந்த அளவிற்குச் சமூகக்கட்டுப்பாடோடு இணைந்து இருக்கின்றது என்பதனை வலியுறுத்துவதாக அமையும் என்று கூறுகின்றார். மேலும் சமூகத்தோடு இணைந்திருக்க மூன்று முக்கியப் படிநிலை வளர்சியையும் முன்வைக்கின்றார். முதலாவதாக, ஒரு மனிதன் நற்பண்புகளோடு ஒத்திருந்து, சமூக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரியாக இருதல் அவசியம் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாவதாக, சமூக வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் அயராது ஒத்துழைக்கும் சிறந்த பண்புகளைக் கொண்ட மானிடனாக இருத்தல் அவசியம். மூன்றாவதாக, சமூகம் சார்ந்த பணிகளில் உயர்தர சிந்தனையும் ஆக்கத் திறமையும் கொண்டு செயல்படுதல் வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*மேற்காணும் ஹர்லோக்கின் கூற்றுபடி இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள். சிறுவர் இலக்கியம் என்பது இன்றைய சிறுவர்களின் அற்புதமான படையல் என்பதும் உண்மையே. சிறுவர்களின் மனப்பாங்கை வளர்த்து, அவர்களைச் சான்றான்மைக் கொண்டவர்களாக செம்மைப்படுத்துவதில் பெரும்பாங்காற்றுகின்றது சிறுவர் இலக்கியம். நன்னெறிகளை, நற்பண்புகளை, உறவுகளை, சமூகத்தை, இயற்கையைச் சிறுவர் சிந்தனையில் புகுத்தி அவர்களைச் சமூகம் எதிர்ப்பார்க்கும் சிறந்த மானிடனாக உருவாக்குவதில் சிறுவர் இலக்கியம் சிறப்பிடம் வகிக்கின்றது.*

*கவிஞர் வேலுசுவாமியின் கைவண்ணத்தில் உருவான கவிதைத் தொகுப்பே அருள்புரிவாய் என்பதாகும். நாடு போற்றும் சிறுவர் கவிஞர்களில் கவிஞர் வேலுசுவாமி போற்றுதற்குறியவர். 61 கவிதைகளை உள்ளடக்கிய அற்புத சிறுவர் கவிதைப் பெட்டகம். ஒவ்வொரு கவிதையும் கவிஞர் சிறுவர்களை அவர் முன்னிறுத்திப் பாடுவது போன்று வடித்திருப்பார். வாசிப்போரை சிறுவர் பருவத்திற்கே அழைத்துச் செல்லும் வல்லமைப் பெற்ற கவிதை தொகுப்பு. **'நன்றி'** என்ற கவிதையின் வழி சிறுவர்களின் மனத்திரையில் நன்றியுணர்வின் முக்கியத்துவத்தை அழகாகச் சித்தரிக்கின்றார்.*

*பச்சைப் புல்லைத் தின்னும் - பசு*
*மாடும் நமக்குப் பால் தரும்*
*எச்சில் சோறு தின்னும் – நாய்*
*என்றும் வீட்டைக் காத்திடும்*
*நாயும் மாடும் நன்றியை – எந்*
*நாளும் மறப்பதில்லையே*
*நாமும் பிறர்செய் நன்றியை – எந்*
*நாளும் நெஞ்சில் எண்ணுவோம் (வேலுசுவாமி, 1977:20)*

*மேற்காணும் கவிதையின் வழி, கவிஞர் மனிதர்கள் நன்றியை போற்ற வேண்டும் என்ற கருத்தினை ஆழமாக சிறுவர்களின் மனதில் பதிக்கின்றார். ஐந்தறிவு படைத்த மிருகங்களான பசுவும் நாயும் தன்னுடைய எஜமானருக்கு எவ்வளவு நன்றியுணர்வோடு இருக்கின்றது என்ற கருத்தினைக் கவிஞர் பதிவுசெய்கின்றார். ஆகவே, ஆறறிவு படைத்த நாம் என்றும் எப்போதும் எச்சூழலும் செய்ந்நன்றிய்யை மறக்காமல் மனதில் போற்றித் துதிக்க வேண்டும் என்பதில் கவிஞர் தெளிவாக இருக்கின்றார். 'தினைத்துணை நன்றி செயினும் மனைத்துணையாகக் கொள்வர் பயன்தெரி வார்' (குறள்:104) என்ற குறளுக்கேற்ப சிறுவர்கள் தமக்கு உதவி செய்தவர்களை, தங்கள் வாழ்வின் ஊன்றுகோலாக உள்ளவர்களை எந்நாளும் மறக்கக்கூடாது. சிறு உதவியாக இருந்தாலும் அதனைப் பேருதவியாகக் கருதி போற்ற வேண்டும். உதவியின் நன்மையை நன்கு அறிந்து மதிக்க வேண்டும். மேற்காணும் கவிதை சிறுவர்களின் மனதை நன்கு செம்மைப்படுத்தி செப்பமிட்டு நன்றியுணர்வுமிக்க சந்ததியை உருவாக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.*

*அதனைத் தொடர்ந்து கவிஞர் வேலுசுவாமி **'யார் மனிதன்'** என்ற கவிதையின் வழி சிறுவர்களின் மனத்திரையில் மனித நேயத்தின் முக்கியத்துவத்தை அழகாகச் பதிவு செய்கின்றார். மனிதன் என்றால் யார் என்ற கேள்விக்கு அற்புதமான பதில்களைத் தன் கவிதை வரிகளில் தெளிவுப்பட வடித்திருக்கின்றார். அக்கவிதை வரிகள் கீழ்வருமாறு:-*

*அன்பு வழியில் நடப்பவன்*
*ஆண்ட வனை நினைப்பவன்*
*மன்னும் உயிரைத் தன்னதாய்*
*மதித்து நடப்போன் மனிதனாம்!*

*மனதில் வாக்கில் உண்மையும்*
*மறந்தும் கேடெண் ணாமையும்*
*குணத்தில் உயர்வும் கொள்கையும்*
*கொண்டு வாழ்வான் மனிதனாம்!*

*தொண்டு செய்யும் எண்ணமும்*
*தூய்மை தியாகம் பணிவதும்*
*கொண்டு இந்தப் பாரிலே*
*கூடி வாழ்வோன் மனிதனாம்!*

*அஞ்சி டாத நெஞ்சமும்*
*அறத்தை மதிக்கும் ஆற்றலும்*

*விஞ்சு புகழும் பெற்றுமே*
*வியக்க வாழ்வோன் மனிதனாம்! (**வேலுசுவாமி**, 1977:49)*

*மேற்காணும் கவிதையின் வழி, கவிஞர் மனிதன் என்று சொல்லக்கூடியவன் சில அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருத்தல் மிக முக்கியம் என்று வலியுறுத்துகின்றார். இறைவன் படைப்பில் சிறப்பிடம் வகிப்பவன் மனிதன். சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுபவன் மனிதன். உதாரணமாக அன்பு, இறைவனை வணங்குதல், உயிர்களை மதித்துப் போற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். மேலும், உண்மையாகப் பேசுதல், தீய எண்ணம் கொள்ளாமை, உயர்ந்த குணம், கொள்கைப் பிடிப்பு கொண்டிருத்தல் வேண்டும் எனவும் சிறுவர் மனதில் பதிவுசெய்கின்றார். தொண்டு புரிதல், ஒற்றுமை உணர்வு, எண்ணத் தூய்மை மற்றும் தியாக மனப்பாண்மையையும் சுட்டிக்காட்டுகின்றார். தைரியம், துணிச்சல், அறவழி நடத்தல், பார் போற்றும் இமயமாக வாழும் ஆற்றலைக் கொண்டிருப்பவன் மனிதன். ஆகவே, இக்கவிதையை வாசிக்கும் மாணவர்கள் நாடும் சமூகமும் போற்றும் தலைச்சிறந்த மனிதனாக உருவாக்க முடியும். பல்வேறு நற்பண்புகளை உள்ளடக்கி நல்ல மனித நேயத்தை விதைக்கின்றது. ஆகவே, இவ்வாறான கவிதை வரிகள்கள் சிறார்களின் பிஞ்சுமனதை அன்பாக வருடிச் செம்மைப்படுத்தும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயபில்லை. இவாறான பாடல்கள்/கவிதைகள் சிறுவர்களை நல்வழிபடுத்தும். அவர்கள் வாழ்விற்கு வழிகாட்டலாகவும் இருக்கும்.*

*மேலும், கவிஞர் வேலுசுவாமி **'செய்யும் தொழிலே தெய்வம்'** என்ற கவிதையின் வழி சிறுவர்களின் மனத்திரையில் தொழிலின்/கடமை முக்கியத்துவத்தை அழகாகச் பதிவு செய்கின்றார். எண்ணித் துணிகக் கருமம் துணிந்தப்பின் எண்ணுவம் என்பது எழுக்கு (குறள்:467) என்ற குறளுக்கேற்ப கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயலாற்ற வேண்டும் என்ற கருத்தினை தமது கவிதை வரிகளில் தெளிவுப்பட வடித்திருக்கின்றார். அக்கவிதை வரிகள் கீழ்வருமாறு:-*

*பள்ளிப் பாடம் படித்திடுவாய்*
*பரீட்சை யெல்லாம் தேறிடுவாய்*
*வெள்ளிப் பணத்தைச் சேர்த்திடவே*
*வேலை யொன்றில் சேர்ந்திடுவாய்!*

*எந்தத் தொழிலும் உலகினிலே*
*ஏற்றம் மிக்க தாதலினால்*
*சொந்தத் தொழில்போல் கருதிடுவாய்*
*சோமபல் இன்றிச் செய்திடுவாய்!*

*செய்யும் தொழிலைத் தெய்வமாய்ச்*
*சிந்தை தன்னில் நினைத்திடுவாய்*
*மெய்யாய் நாளும் உழைத்திடுவாய்*
*மேன்னை வருமென உணர்ந்திடுவாய்!*

*பணத்துக் காய்தான் உழைப்பெல்லாம்*
*பண்பு வேண்டும் அதிலும்தான்*
*வணக்கம் இணக்கம் அமைந்திருந்தால்*
*வந்தே சேரும் உயர்வெல்லாம் **(வேலுசுவாமி, 1977 : 50)***

*தொழில் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியம், ஆதலால் பள்ளிப் பருவத்தில் சிறப்பாகக் கற்றுத் தேற்சிப் பெற வேண்டும். வருமானத்தை ஈட்ட கல்வி மிக முக்கியம் என்பதனை வலியுறுத்துகின்றார். மேலும் தொழிலைப் பற்றி சிறப்பித்துக் கூறுகையில், சொந்தத் தொழில் போன்று சிறப்பானது வேறொன்றுமில்லை என்ற கருத்துனையும் வலியுறுத்துகின்றார்.*

*சோம்பலை விடுத்து, கடமையுணர்வோடும் பொறுப்புடனும் தொழில் செய்ய வேண்டும். வாழ்க்கையில் முன்னேற தொழில் அவசியம், அதனைப் பற்று மற்றும் பக்தியோடு செய்தால் சிறப்பான முன்னேற்றம் பெறலாம் என்றும் வலியுறுத்துகின்றார் கவிஞர் வேலுசுவாமி. பணம்*

*ஈட்டுதல் மட்டும் குறியாக இருந்துவிடாமல், நாம் செய்யும் தொழிலில் ஒழுக்கமும் பண்புநெறிகளும் கொண்டிருத்தல் அவசியம். தூய்மையானச் சிந்தனை, உயர்வுள்ளம், நன்னெறிப் பண்புகள் போன்றவை நாம் செய்யும் கடமை அல்லது தொழிலில் கடைபிடித்தால் வாழ்க்கையில் உயர்வு தானாகத் தேடிவரும் என்ற கருத்தினைச் சிறார்கள் மனதில் படிப்படியாகப் பதிவுசெய்கின்றார் கவிஞர்.*

*மேலும், கவிஞர் வேலுசுவாமி* ***'அறிவில் கனிய வேண்டும்'*** *என்ற கவிதையின் வழி சிறுவர்களின் மனத்திரையில் தொழிலின்/கடமை முக்கியத்துவத்தை அழகாகச் பதிவுசெய்கின்றார். எண்ண்ணித் துணிகக் கருமம் துணிந்தப்பின் எண்ணுவம் என்பதபது இழுக்கு (குறள்:467) என்ற குறளுக்கேற்ப கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயலாற்ற வேண்டும் என்ற கருத்தினைத் தமது கவிதை வரிகளில் தெளிவுப்பட வடித்திருக்கின்றார். சிற்பி போன்று சிறுவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் அழகாகச் செதுக்கி உருவாக்கி, சிறந்த மானிடனாக வலம்வரச் செய்கின்றார் கவிஞர் வேலுசுவாமி.*

*முத்தெடுக்க மனிதர் கடலுள்*
*மூழ்கல் போல மாணவர்*
*வித்தை யாம்நல் முத்தெடுக்க*
*விழைய வேண்டும் உலகிலே*

*உடல் வளர்க்க நல்லுணவை*
*உண்ணல் போல மாணவர்*
*திடஅறிவு பெருக நூலில்*
*திரட்ட வேண்டும் கருத்தையே*

*விளக்கினாலே இருட்டை யோட்டி*
*விடுதல் போல மாணவர்*
*துலக்கமான நூல்ப யின்று*
*துரத்த வேண்டும் மடமையை*

*உடற்பயிற்சி செய்து ரமாய்*
*உள்ள வர்போல் மாணவர்*
*கடமையாகத் தினம்ப யின்று*
*கனிய வேண்டும் அறிவிலே (வேலுசுவாமி, 1977:56)*

*கல்வி வாழ்வின் ஒளிவிளக்கு என்பர். அதுபோல், சிறுவர்கள் சிறார் பருவம் முதலே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் தெள்ளத் தெளிவாக உள்ளார் கவிஞர் வேலுசுவாமி. கல்வி என்ற முத்தினை முயற்சியுடன் முயன்று பெற வேண்டும் என வலியுறுத்துகின்றார். உடல் வலிமைக்கு உணவு முக்கியம். அதுபோல் அறிவு வலிமைக்குச் சிறந்த நூல்கள் வாசித்தல் அவசியம் என்பதனைத் திடமாகக் குறிப்பிடுகின்றார். நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு என்ற பழமொழிக்கொப்ப சிறுவர்கள் கட்டாயம் பல்வேறு வகையான நூல்களை வாசித்துச் சான்றோனாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் கவிஞர் கூறுகையில், பல்வேறு வகையான நூல்களை வாசிப்பது அறிவினைப் பெருக்கி மடமையை அகற்றும் வல்லமைக் கொண்டது. அறிவில் சிறப்புற்று விளங்கலாம் என்றும் குறிப்பிடுகின்றார். கல்விக் கற்பது தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். அனுதினமும் கற்றல் வாழ்வில் சிறப்பாக நடைபெற வேண்டும். சிறுவர்கள் வாழ்வில் அறிவு முதிர்ச்சிப் பெற்று கனிய வேண்டும் என்ற கருத்தினை மிக அழகாகப் பதிவுசெய்கின்றார் கவிஞர் வேலுசுவாமி. இவ்வாறான பாடல் வரிகள் கல்வி கற்ற சிறுவர்களை உருவாக்கி நாடும் சமூகமும் போற்றும் தலைச்சிறந்த குடிமகனை உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.*

*கல்லில் மறைந்திருக்கும் சிற்பம் போன்று கவிஞர் வேலுசுவாமியின் கவிதைகள் பல நற்சிந்தனையை உள்ளடக்கிய சிறுவர் கவிதை தொகுப்பு. உளிப்பட்ட கற்களில் சிற்பம் அழகாய்க் காட்சியளிக்கும். அதுபோல், இவருடைய சிந்தனைச் சிதறல்கள் சிறுவர் கவிதைக்கு முத்து*

*வரிகளாகத் திகழ்கின்றன. இவர் இயற்றிய ஒவ்வொரு கவிதையும் சிறுவர்களுக்காகவே. சிறுவர்களுக்கு அன்புகாட்டி அரவணைத்துப் பாடுவது போன்று வடித்திருப்பார். **'அன்பு காட்டுவோம்'** என்ற கவிதையின் வழி சிறுவர்களின் மனத்திரையில் அன்புணர்வின் முக்கியத்துவத்தை அழகாகச் சித்தரிக்கின்றார். அன்பு, பண்பு, பாசம், நேசம் போன்ற பண்புகளை மையமாகக் கொண்டு உருவாக்கியுள்ளார்.*

*அன்பு காட்டி வாழ்வோம்*
*அதுவே தெய்வம் அறிகுவோம்*
*இன்பம் பிறக்கும் உணருவோம்*
*எடுத்து எவர்க்கும் சொல்லுவோம்!*

*அம்புக் கடிமை யாகிட்டார்*
*யாரும் உண்டோ சொல்லுவீர்*
*மன்னும் உலகில் அன்பினால்*
*மறுப்பும் வெறுப்பும் மறையுமாம்!*

*'அன்பும் சிவமும் ஒன்'றென*
*அறிஞர் சொன்ன அறிவுரை*
*எண்ணி நெஞ்சத் திருத்துவோம்*
*எவர்க்கும் அன்பு செய்குவோம்!*

*படித்தல் வேண்டும் இளமையில்*
*பண்பு இதுவும் மனத்திலே*
*மடிதல் திண்ணம் பகைமைகள்*
*மகிழ்ச்சி பிறக்கும் வாழ்விலே! **(வேலுசுவாமி, 1977:38)***

*சிறுவர்கள் அன்பு எனும் கடலில் மூழ்கிய முத்தாய்த் திகழ வேண்டும் என்ற கருத்தினைத் தெள்ளத் தெளிவாக விதைக்கின்றார் கவிஞர் வேலுசுவாமி. அன்பின் வழி பல அற்புதங்கள் நகழும் என வலியுறுத்துகின்றார். மக்களிடையே ஒற்றுமை மேலோங்கும். புரிந்துணர்வு தலைப்படும். வெறுப்பு விட்டொழியும். 'அன்பே சிவம்' என்ற தாரக மந்திரத்தை அற்புதமாக எடுத்துரைக்கின்றார் கவிஞர் வேலுசுவாமி. உலகில் ஒருவர்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பை வலியுறித்தி வாழ்ந்தால் என்றும் எப்போதும் நன்மையே பிறக்கும் என்பது திண்ணம். இவ்வாறான பாடல் வரிகள் அன்புள்ளங்கொண்ட சிறுவர்களை உருவாக்கி நாடும் சமூகமும் போற்றும் தலைச்சிறந்த குடிமகனை உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.*

*கவிஞர் வேலுசுவாமி குழந்தைகளின் மனதை நன்கு அறிந்து, புரிந்து, தெரிந்து, தெளிந்து சிறுவர் படைப்புகளை உருவக்கியவர் என்றால் மிகையாகாது. சிறுவர்களின் ஒவ்வொரு அசைவையும் கண்டு மகிழ்ந்து தன் படைப்புகளில் அதனை வலியுறித்தியும் உள்ளார். சிறுவர்களின் பசுமையான வளமான எதிர்காலத்திற்கு ஊன்றுகோலாய்த் திகழ்ந்தவர் கவிஞர் வேலுசுவாமி. தன்னுடைய படைப்புகளில் மேற்காணும் சிந்தனைகளை மிக அற்புதமாக உட்புகுத்தி சிறுவர்களை நாட்டின் பயன்மிக்க குமுகாயமாக உருவாக்க அரும்பாடுபட்டிருக்கின்றார் என்பது வெள்ளிடைமலை. இதனை உணர்ந்த திருவள்ளுவர் அன்றே குழந்தைச் செல்வத்தை இவ்வாறு கூறுகின்றார்.*

*''பெறுமவற்றுள் யாமவறிய தில்லை அறிவறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற'' (குறள்:70)*

*மனிதன் வாழ்க்கையில் பெறும் பேறுகளில் சிறப்புமிக்கதாகக் கருதப்படுவது மக்கட்பேறு. விலை மதிக்கத்தக்க குழந்தைச் செல்வம். பொருட்செல்வம், கல்வி செல்வம், செவிச்செல்வம் போன்ற செல்வங்களில் முன்னோடியாகத் திகழ்வது குழந்தைச் செல்வமே. இச்செல்வம் சிறப்புடன் வளர்ந்து திகழ சிறுவர் இலக்கியம் முக்கியமான கூறாகும். இதனை உணர்ந்தே, கவிஞர் வேலுசுவாமி தம் படைப்புகளில் வாழிவியல் சிந்தனைகளை உட்புகுத்திப் படைத்திருக்கின்றார்.*

**மேற்கோள்கள்**


1. முரசு நெடுமாறன் (1997). மலேசியத் தமிழ்க் கவிதை களஞ்சியம். கிள்ளான்: அருள்மதி பதிப்பகம்.
2. சுப்பிரமணியன் (1983). திராவிட மொழி இலக்கியங்கள். உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை: பாரி நிலையம்.
3. டாக்டர் மு.வ. (1961) இலக்கியத்திறன். சென்னை: பாரி நிலையம்.
4. அழ. வள்ளியப்பா (1991). சிரிக்கும் பூக்கள். சென்னை: பாரி நிலையம்.
5. மா. இராமையா (1978). மலேசிய தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை: புரட்சிப் பண்ணை.
6. பூவண்ணன் 1976). சிறுவர் இலக்கியச் செல்வங்கள். சென்னை: வான்மதி பதிப்பகம்.
7. முனைவர் இலக்குமி மீனாட்சி சுந்தரம். மாலேசியத் தமிழ் சிறுவர் இலக்கியம்
8. அழ. வள்ளியப்பா (1961). வளரும் குழந்தை இலக்கியம். சென்னை: பாரி நிலையம்.
9. இரா. தண்டாயுதம் (1999). மலரும் மலர், சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.
10. வேலுசாமி (1978) அருள்புரிவாய். கோலாலும்பூர் : திருமகள் வெளியீடு
11. பெரியண்ணன் (1997) சிறுவர் பாடல்கள். சென்னை : பனிதா பதிப்பகம்.
12. தேசிக விநாயகம் பிள்ளை (1993). குழந்தைச் செல்வம். சென்னை: பாரி நிலையம்.